RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1957

OPEN ACCESS

# பாமாவின் அந்தி சிறுகதையின் அறநெறிச் சிந்தனைகள்

**த. காளீஸ்வரி [அ, *], இரா. சிவகுமாரன் [அ]**

[அ] தமிழாய்வுத்துறை, ம.இரா. அரசினர் கலைக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுப் பெற்றது), மன்னார்குடி-614001, தமிழ்நாடு, இந்தியா

# Moral Principles in Bama's Short Story 'Anthi'

**T. Kaleeswari [a, *], R. Sivakumaran [a]**

[a] Department of Tamil, M.R. Government Arts College, (Affiliated to Bharathidasan University), Mannargudi-614001, Tamil Nadu, India

* Corresponding Author: tkaleeswari85@gmail.com

Received: 12-09-2022
Revised: 30-10-2022
Accepted: 11-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Bama, is a prominent leading author of Dalit literature. Her novel Karuku written in 1992 became famous because of its autobiographical elements. She used the language of Dalit people in her writings and it is considered to have paved a new path. She works as a teacher. Her novel Karuku has been translated into English by Lakshmi Holmstrom. She received the 'Cross Wordbook Award' of the year 2000. Bama, who was born in the sixties in Tamil Nadu is currently working as a teacher. Her novels Karuku (1992) and Sangathi (1994) are two of the best Dalit novels. Karuku (Novel-1992), Sangathi (Novel-1994), Vanmam (Novel-2002), Kisumbukkaran (Short Story- 1996), Manushi (Novel) and Thavutu Kuruvi (2019 short- stories) bear great moral thoughts. A short story called 'Anthi' has been taken up for analysis in the short stories of Daututuk Kuvi. In this story Bama highlighted the sufferings of lonely old people. Anthi is a short story that captures the life style of the people living with goats and cows. Bama points dignified lifestyle through the lifestyle of Thavasi grandma. In the short story 'Anthi' Bama has created a character Thavasi grandma who want to live her life by herself without depending on others. Morality is of the views regarding how one should behave in society. It can be defined as the set of behaviors accepted by a society regarding what is good and what is bad. Morals are not the same in all societies as can be seen in the short story of Anthi through Thavasi grandma. As the problems are different from time to time, according to the development of the society, the stories are created from a critical point of view. This article is about the life style of Thavasi grandma as mentioned in the story 'Anthi' by Bama.

**Keywords:** Short Story, Anthi, Moral Principles, Literature

## முன்னுரை

எழுத்தாளர் படைத்துள்ள 'தவுட்டுக் குருவி' என்னும் சிறுகதைகள் அடித்தட்டு மக்களின் கிராமியம் கமழும் சிறுகதைகளின் தொகுப்பாகத் திகழ்கின்றது. தவிட்டுக்குருவி என்னும் சிறுகதைத் தொகுப்பில் மொத்தம் 25 கதைகள் அமைக்கப்பட்டுள்ளன (Bama, 2019). கொண்டாட்டம், அந்தி, கோடை மழை, வெறுங்கூடு, உணர்வு, அம்மாவுக்கு புரிந்தது, விட்டு விடுதலையாகி, நிழலும் நிஜமும், முள்வேலி, சாமியாட்டம் தவிட்டுக்குருவி அடையாளம் சிதறல்கள், ஆவிகளும் ஆண்டைகளும், வலி, வயிறும் வாழ்க்கையும் ஏடாகூடம், சிவன், எள், அந்த, இழப்பு, துர்காவும் நானும், மஞ்சள் நிற வண்ணத்துப்பூச்சி, பொய்யஞ்சாமி ஆகிய சிறுகதைகளை இந்நூல் கொண்டுள்ளது சிறுகதை தொகுப்பில்

உள்ள அந்தி என்னும் சிறுகதையின் வழியாக அறநெறிச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## வைராக்கியமாக வாழ்வதே வாழ்வு

அந்தி என்னும் சிறுகதையில் கிராமத்தில் வாழ்கின்ற தவசி பாட்டியின் வழியாக வாழ்வியலை வெளிப்படுத்தியுள்ளார் எழுத்தாளர் பாமா. மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது சினுங்கள் மழையினால் ஏற்படும் சிரமங்களை ஆரம்பத்திலேயே சொல்லிவிடுகிறார் எழுத்தாளர் (Rathinam, 2009). இது பிறகு ஆடு மாடுகள் வைத்து இருக்கின்ற வீடுகளில் உள்ள சூழலை அடையாளப்படுத்துகிறார். சொந்த வீட்டுப் பிள்ளைகளைப் போல ஆடு, மாடுகளை வளர்க்கின்ற கிராமத்து மக்களின் வாழ்வியலை இந்தக் கதையின் வழியாகக் காண முடிகிறது. தவசி பாட்டியின் ஆட்டுக்குட்டி வளர்ப்பு என்பது பெற்றெடுத்த பிள்ளையைப் போல இருக்கிறது என்பதை இந்தக் கதை உணர்த்துகிறது. ஏழு எட்டு மக்கள் பெற்று எடுத்த போதிலும் யாருடைய வருமானத்தையும் எதிர்பார்த்து காத்திருக்காமல் வயதான காலத்திலும் சுயமாக உழைத்து வாழ வேண்டும் என்னும் ரோசக்காரக் கிழவியாக படைக்கப்பட்டிருக்கிறார் தவசி பாட்டி. தன் கணவன் மாடசாமிக் கிழவன் இறந்த பிறகு ஏழு எட்டு வருடம் ஆன பிறகும் கூட கணவனின் நினைவுகளிலேயே காலத்தைக் கழிக்கிறாள். வைகாசி மாதம் திருவிழா அன்று உறவினர்கள் வருகின்ற பொழுது தவசி பாட்டியின் கையில் அஞ்சோ பத்தோ கொடுக்கும் உறவுகளின் நிலையை இந்தக் கதையின் வழியாகக் காண முடிகிறது. ஒரு மாசமாக அடைமழை தொடர்ந்து கொண்டிருக்கிறது. களத்து மேட்டிலே நாலு மரக்கா நெல்லு பிள்ளைகளுக்காகச் சேர்த்து வைத்திருந்தால் தவசி பாட்டி. மழையின் காரணமாக வேலை வெட்டிக்குப் போக முடியல என்னும் நிலையில் சேமித்த நெல்லை வைத்து உணவு உண்ண வேண்டிய நிலை வருகிறது. அவள் ஒரு நாள் கூட கையேந்தி போனதில்ல என்று ஊரார் சொல்லுகின்ற அளவுக்கு தவசி பாட்டி வைராக்கியமாக வாழ்கின்ற வாழ்க்கையை அந்தி என்னும் சிறுகதை காட்டுகிறது (Bama, 2019).

## அக்காள் தம்பி பாசம்

அந்தி என்னும் சிறுகதையில் அக்கா தம்பி மீது கொண்ட பாசத்தைக் காண முடிகிறது. ஆட்டுக் குட்டியைத் தனியாக வளர்த்து வந்த அக்காவிடம் தம்பி பேசுகிறான். தம்பிக்காரன் ஆட்டுக்குட்டிகளோட விடாம தனியா வளர்க்கிறாள் அக்கா பிறருக்குத் தொந்தரவு தராத மனசு மக்களுக்கு என்று தம்பி பேசுகிறான் இந்தச் சூழலில் அக்கா தங்கை சார்ந்த உறவு மேம்பாடு அறிய முடிகிறது. தம்பியின் பெயர் கிருஷ்ணன். ஒரு முறை தெரு மக்களிடம் சொல்லி ஆத்திரப்பட்டான் அக்கா ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று பேசி ஆதங்கப்பட்டான். இந்த இடத்தில் தம்பியின் பாசத்தை உணர முடிகிறது (Bama, 2019).

ஆட்டுக்குட்டி இடம் பிரியம் அதிகமாக வைத்திருந்தாள் தவசி பாட்டி. பேரன் பேத்தியைப் போல எண்ணி ஆட்டுக்குட்டியிடம் பேசுவாள். சக மனிதர்களுடன் அன்பு கொண்டு வாழும் உள்ளத்தையும் விலங்குகள் மீது பாசத்தைக் காட்டி வாழ்கின்ற அன்பையும் தவசி பாட்டின் வழியாக உணர முடிகிறது (Bama, 2019).

## சுயமாக உழைத்து முன்னேறும் எண்ணம்

அந்தி என்னும் சிறுகதையில் வாழ்க்கை பற்றியச் சிந்தனைகள் பலவாறு பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒருமுறை தவசி பேசுகிறாள் நடமாட்டம் இருக்கும் போதே போய் சேரனும் ஆராயி தூக்கி விட்ட கொடத்த இடுப்புல வச்சுக்கிட்டு செல்கிறாள். இரண்டு நாளாக மழை ஒஞ்ச பாடு இல்லை. கொஞ்சம் மழை நின்றவுடன் ஓடப் பக்கம் போகிறாள் கிழவி. அப்பொழுது அவளுக்கு இளமைக் காலத்து நினைவுகள் வருகிறது (Bama, 2019).

பசுமை உயிர் வேலி முள்ளையும் வெட்டி வருவோம் போட்டி போட்டு முள்ளுப் பொறுக்கும் குமரி சிறு வயது நினைவுகளை எண்ணிப் பார்க்கிறாள். நமத்துப் போன காஞ்ச முல்லைக் கட்டிகிட்டு மாலை இருட்டுல புறப்பட்டாள் தவசி கிழவி. வாழ்க்கை என்பது உறவுகளால் பின்னி பிணைக்கப்பட்டது. உறவினர்களுடன் சேர்ந்து வாழ்கின்ற வாழ்க்கை என்பது தனித்துவமானது. அதே சமயத்தில் உறவினர்கள் பெற்ற பிள்ளைகள் வெளியூர்களில் வாழ்கின்ற பொழுது தனியாக வாழும் வயது முதிர்ந்து ஒரு நிலை வருத்தத்திற்குரியது. இதனைத் தான் அந்தி என்னும் சிறுகதை எடுத்துக்காட்டுகிறது சுயமாக உழைத்து முன்னேற வேண்டும் என்ற ஒரு தவசி கதாபாத்திரத்தை பாமா அவர்கள் மிகத் தெளிவாகப் படைத்து காட்டி உள்ளார் (Bama, 2019).

## பெற்ற பிள்ளையைப் போல ஆட்டுக்குட்டி

தவசி பாட்டியுடன் ஆட்டுக்குட்டி எப்பொழுதும் நெருங்கி ஓடி வந்து விளையாடித் திரியும். ஒரு முறை ஆட்டுக்குட்டி கத்தும் பொழுது தவசி பேசுகிறாள். என்னடி என் செல்லம் ரொம்ப நேரமா காணும்னு தேடுறியாக்கும் என்று சொல்லும் படியாக ஆட்டுக்குட்டியிடம் தவசிக் கிழவி பேசுகிறாள் (Bama, 2019).

சரி சரி மழை வர மாதிரி இருக்கு ஒத்த பயபுள்ளைங்க காணோம் வா போலாம் என்று புறப்பட்டு வருகிறாள். வீட்டில் வளர்க்கும் விலங்குகளிடம் எப்பொழுதும் பாசத்தை ஊட்டி வளர்க்கும் மக்கள் இருக்கின்றனர். ஆனால் கொஞ்சம் கூடுதலாக ஆட்டுக்குட்டியின் மீது மிகுந்த அன்பு கொண்டு தன் பாசத்தையும் சமமாகப் பகிர்ந்து கொடுக்கின்ற உயர்ந்த உள்ளமாக தவசி பாட்டி உள்ளம் திகழ்வதை அந்தி சிறுகதை எடுத்துக்காட்டுகிறது (Bama, 2019).

## வாழ்க்கையில் நிதானம் தேவை

மனித பிறப்பில் ஒவ்வொருவருக்கும் இறைவன் தன்னுடைய விதி எழுத்தை எழுதி வைத்துள்ளான். விதிப்படிதான் எல்லாம் நடக்கும் என்ற கருத்தும் பரவலாகப் பல்வேறு சூழலில் உண்மையெனக் கருத இடம் பெறுகிறது. அந்தி சிறுகதையில் தனியாக வாழ்கின்ற தவசி பாட்டி மேட்டுக்காட்டில் முள்ளு பொறுக்கிக் கொண்டு வீடு திரும்பும் பாதையில் ஆட்டைப் பார்த்துகிட்டே வந்த தவசி பாட்டி தண்ணி வெட்டுக் குழியில் உள்ளே விழுந்துட்டா நெஞ்சு வரைக்கும் தண்ணி மூழ்கி விட்டது. என்று படிக்கின்ற பொழுது வாசகருக்கு கண்ணீர் வந்து விடுகிறது. நான்கு அடி ஆழமுள்ள குழியில் சேரும் சகதியும் உள்ள குழியில் விழுந்த தவசி பாட்டி வெளியே வர முடியாமல் ஏற முடியாமல் தடுமாறுகிறாள் (Gnnamurthy, 1996).

அப்பொழுது பாசமாக ஆட்டுக்குட்டி அவளை பார்த்துக்கிட்டு மே மே மே என்று கத்திக்கிட்டே அந்தப் பள்ளத்தையே சுத்திச் சுத்தி வந்துக்கிட்டு இருந்துச்சு. இந்தக் காட்சியை எண்ணிப் பார்க்கையில் எவ்வளவு அன்பின் வெளிப்பாட்டை உணர முடிகிறது. இப்படியாக அந்தி சிறுகதையைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்கிறார் எழுத்தாளர் (Bama, 2019).

## விதி வலியது

தவசி பாட்டியின் கடைசிக் கால வாழ்க்கை மிகவும் சோகத்தில் முடிந்திருக்கிறது. என் விதி இப்படியா ஆகணும் என் தம்பி கிருஷ்ணன் கூட இப்ப வீட்டுல தான் இருப்பான் பெத்த மக்கமாறு இருந்தும் இப்படி அனாதையா சாகணும்னு என் தலையில எழுதிட்டானே என்று துக்கத்துல தவசி குமுறிக் குமுறி அழுதாள்.

இந்தச் சூழ்நிலை ஒவ்வொரு வீட்டில் உள்ள முதியவர்களுக்கும் தனிமையில் வாழ்கின்றவர்களுக்கும் நிச்சயம் இருக்கும். இதை வலியுறுத்திக் கூறுவதாக அந்தி சிறுகதை படைக்கப்பட்டிருப்பது வாழ்வியல் அறம் சார்ந்த விதிப் பயனைச் சுட்டுவதாக அமைகின்றது (Bama, 2019).

## அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்

அந்தி சிறுகதையில் பல்வேறு அறம் சார்ந்த சிந்தனைகள் காணப்படுகின்றன. அன்பின் வெளிப்பாடு என்பது மனிதர்களுக்குள் மனிதர்கள் வெளிப்படுத்திக்கொள்வது ஒரு வகை. அதேபோல மனிதர்கள் விலங்குகள் மீது அன்பை வெளிப்படுத்துவதும் மற்றொரு வகை. அதையும் தாண்டி வீட்டில் வளர்க்கும் விலங்குகள் தன்னை வளர்க்கும் நபர்கள் மீது வைக்கின்ற அன்பு என்பது போற்றுதலுக்கு உரியது. தவசி பாட்டி ஆட்டுக்குட்டியைப் பார்த்துப் பேசுகிறாள். **வெயில்** காலமாக இருந்தாலும் பரவாயில்லை குளிருக்குள்ள ஒத்த ஈங்குஞ்சு வராது என்று ஆட்டுக்குட்டியைப் பார்த்துட்டு தவசி பாட்டிபேசுகிறாள். அதுகிட்ட ஆத்த மாட்டாம புலம்பத் தொடங்கினாள். என் நிலைமையைப் பார்த்து நீ அழுவுற ஏழு எட்டு பிள்ளைகளைப் பெற்று படிக்க வைத்து கடம்பட்டு உடம்பட்டு கல்யாணம் முடிச்சேன் அதுக வாழ்க்கைய பார்த்துகிட்டு பட்டணத்தில் போயிடுச்சு பிறந்த மண்ணை விட்டு போறேனே என்று விம்மி விம்மி அழுதாள் தவசி பாட்டி என்று கூறி மனித வாழ்க்கையில் கடந்து வரும் பாதையை எண்ணிப் பார்க்கின்ற அறம் சார்ந்த சிந்தனையை இங்கே பதிவு செய்துள்ளார் (Bama, 2019).

## தனக்குத் தானே துணையாக இருந்து வாழ்க

ஆட்டுக்குட்டியைப் பார்த்து தவசி பாட்டி கடைசியாகப் பேசுகின்ற பொழுது யாரும் கை காலில் விழாமல் போய் இரு என்று விம்மி இருந்தாள் காலையிலே விரைத்துக் கிடந்தாள் என்று கதை முடிகிறது. ஒருமுறை கொளத்தூரில் அண்ணம்மா பாட்டி ஆட்டுக்குட்டிக்கும் தவசி பாட்டிக்கும் உள்ள அன்பைப் பற்றிக் கூறுவாள். அந்தக் குட்டியும் எந்த நேரமும் இவா கால சுத்திட்டு இவளிடம் ரொம்பப் பிரியமா தான் இருக்குது அதுதான் அவளுக்கு துணையா நிக்குது இவ்வாறு பாட்டி என்னும் கதாபாத்திரத்தின் வழியாக பல்வேறு அறம் சார்ந்த சிந்தனைகளை எடுத்துப் பரவலாகப் பரவி விட்டிருக்கிறார் படைப்பாளர் (Bama, 2019).

## அறம் பார்வையில் சமூகம்

எழுத்தாளர் பாமா படைத்துள்ள அந்தி என்னும் சிறுகதையில் அறம் சார்ந்த சமூகப் பார்வையைக் காண முடிகிறது. மழையின் தேவையும் அதிகமான மழையினால் ஏற்படுகின்ற இடையூறுகளும் பற்றிய சிந்தனையைக் கதையின் தொடக்கத்திலேயே சிந்திக்க வைக்கிறார். கொளத்தூர் என்னும் ஊரினுடைய தெருக்கள் குண்டும் குழியுமாகக் கிடந்த தெருக்களாக இருக்கிறது என்பதையும் பதிவு செய்கிறார். வீட்டிலே ஆடு மாடுகள் கட்டுகின்ற மாட்டுக் கொட்டாய் நிலை என்பது சுகாதாரமற்ற நிலையில் இருக்கிறது. கம்மாய்ப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வியல் அடையாளம் காட்டப்பட்டிருக்கிறது. ஆடு மாடுகளை காடு கரைகளில் மேய்கின்ற தொழிலைப் பற்றிய சிந்தனை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆடு வெச்சிருந்தவங்க பாடு பரவாயில்லை என்று சொல்லுகின்ற சொல் வழக்குகளும் படிப்பவரை கவனிக்க வைக்கிறது. வீட்டுத் தாழ்வாரத்தில் ஆட்டுக்குட்டிகள் வாழும் பாசத்தின் காட்சிகள் சிறுகதைக்கு மேலும் சிறப்புச் சேர்க்கின்றன. இப்ப ஒத்தையில உலை வச்சு காட்சி கொடுக்கிறத பார்க்கையில கருமாயமாய் இருக்கும் என்று பேசுகின்ற கிராமிய புழங்கு பொருள் சொற்கள் புதுமையான சிந்தனையைத் தருகின்றன. மக்கமார் வேலை வெட்டி போன்ற சொற்களெல்லாம் வட்டார வழக்கு சொற்களாக காணப்படும் என அற விழுந்தது கணக்கா ஆகிப்போச்சு என்று சொல்லுகின்ற பொழுது கிராமத்து பழமொழி நினைவுக்கு வருகிறது. கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் ஒவ்வொன்றும் அறத்தின் வெளிப்பாடாக உண்மையின் காட்சிகளாக காணப்படுவதை எழுத்தாளர் பாமா அந்தி சிறுகதையின் வழியாக விளக்கி காட்டியுள்ளார் (Bama, 2019).

## முடிவுரை

படைப்பாளர் பாமா படைத்துள்ள அந்தி சிறுகதை வழியாக உறவுகளின் மேம்பாடு நன்கு அறிய முடிகிறது. வருசத்துல ஒருவாட்டி ஊரு திருநாள் வரும்போது மக்கமாறு மருமக்கமாறு பேரனுக

பேத்திமாறுக ரொம்ப பெருகளமா வந்து போவாக என்று சொல்லுகின்ற பொழுது உறவுகளின் உன்னதத்தை அறிய முடிகிறது. உடன் பிறந்தவர்களிடம் அன்பு காட்டுகின்ற தன்மை என்பது வித்தியாசமானது தவசி பாட்டி என்னும் அக்காவிடம் கிருஷ்ணன் என்னும் தம்பி பாசத்தை வெளிப்படுத்துகிறார். இந்த வயசான காலத்துல ஏம்பா இப்படி கடந்து ஒத்தையில கஷ்டப்படுற பேசாம என்கூட வந்துரு இல்லையென்றால் மக்கமாறு கிட்டயாச்சும் போய் இரு நடக்க மாட்டாம நடந்துகிட்டு வேலை வெட்டிக்கு போற தண்ணி கூட தூக்குற கஞ்சி தண்ணியும் காய்ச்சிக்கிற பத்தா குறைக்கு ஒரு ஆட்டுக்குட்டி வேற என்று தம்பி பேசுகிற பொழுது கண்களில் ஈரம் சொறிகிறது. அடை மழை காலம் அறுப்பு காலம் என்ற சொலவடைகள் நல்ல கருத்துக்களை விளக்கி நிற்கிறது. தம்பி துன்பப்படுவதைக் கண்டு அக்கா வருத்தப்பட்டு உனக்கு பாரமாக இருக்கக் கூடாது என்பதற்காக ஒரு கருத்தைப் பேசுகிறார் உனக்கு இருக்கிற சல்லைல இது என்னத்துக்குடா அவளே வச்சுக்கிட்டு லோளு படட்டும் எந்த நேரமும் ஒத்தையில கிடக்கிறது வெறுக்க வெறுக்கென்று இருக்குறது. கூட இந்த ஆட்டுக்குட்டி இருக்கிறது கொஞ்சம் தெம்பா இருக்குது. இப்படி தவசியின் தனிமையைத் தெளிவான சொற்களால் விளக்கிக் காட்டுகிறார் பாமா. அனுபவத்தின் தன்மையை ஒட்டி உண்மையும் ஆழமும் வாய்ந்த உணர்ச்சிகள் தோன்றுகின்றன அவ்வுணர்ச்சிகள் உடலின் கண் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்ற ரிச்சர்ட்ஸ் கருத்தை தா. ஏ. ஞானமூர்த்தி எடுத்து உரைப்பார் அத்தகைய உணர்வுகளை அந்தி சிறுகதை நமக்கு உணர்த்துகிறது. அந்திப் பொழுதில் தனிமையில் வாழ்கின்ற முதியவர்கள் பாதுகாப்பாகவும் மிகுந்த எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் என்பதை இச்சிறுகதை வலியுறுத்துகிறது. அதுமட்டுமின்றி வயதான காலத்திலும் கூட பிறரை எதிர்பார்க்காமல் வாழ வேண்டும் என்பதையும் அறநெறி சிந்தனையாக அந்தி சிறுகதை எடுத்துரைக்கிறது. தவசி பாட்டி போல ஒவ்வொரு மனிதரும் தன் உழைப்பில் முன்னேறி தன் குடும்பத்திற்காக வாழ்ந்து கடைசியாக விலங்குகளின் மீது கூட பாசத்தை வைக்கின்ற வைராக்கியமான உள்ளம் படைத்தவராகத் திகழ வேண்டும் என்பதை அந்தி சிறுகதை படிப்போரின் ஒவ்வொருவருக்கும் உணர்த்திக் காட்டுகின்றது.

## References


Gnnamurthy, T.A. (1996) Ilakkiyath Thiranaaiviyal, Yazal Veeliyeedu, Chennai, India.

Rathinam, (2009) Sirukadhai saralam, Ainthinai Pathippagam, Chennai, India.

Bama, (2019) Thavuttuk Karuvi, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License